**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.50/2019**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி பி. கௌசல்யா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு அக்டோபர் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் . | வெங்கட்ராவ் | மதம் . | |
| த/பெ . | சுப்பையா செட்டி | ஜாதி . | |
| வயது . | 51 | கிராமம் . | |
| தொழில் | | வட்டம் . | |

**வாதி தரப்பு 1வது சாட்சியின் முதல் விசாரணை**

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். கடந்த 1.7.1998ல் என் பெயருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திர சான்றிட்ட நகலை (அசல் கனரா வங்கியில் உள்ளது) வா.த.சாஆ. 1குறியிடுகிறேன். கடந்த 9.11.1998ல் சோமையா செட்டிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திர சான்றிட்ட நகலை (அசல் கனரா வங்கியில் உள்ளது) வா.த.சாஆ. 2 குறியிடுகிறேன். கடந்த 25.1.2006ல் எனக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திர சான்றிட்ட நகலை (அசல் கனரா வங்கியில் உள்ளது) வா.த.சாஆ.3 குறியிடுகிறேன். என் பெயரில் உள்ள கனிணி பட்டா வா.த.சாஆ.4 குறியிடுகிறேன். கடந்த 15.3.2018ன் கிஸ்து ரசீது வா.த.சாஆ. 5 குறியிடுகிறேன். 27.5.2019ன் கிஸ்து ரசீது வா.த.சாஆ. 6 குறியிடுகிறேன். கனிணி அ பதிவேடு வா.த.சாஆ. 7 குறியிடுகிறேன். கடந்த 21.6.2019ல் எடுத்த கனிணி வில்லங்க சான்றிதழ் வா.த.சாஆ. 8 குறியிடுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**